# காலாண்டுத் தேர்வு– 2024

## ( பாடசாலை மாதிரி வினாத்தாள்)

## பொதுத் தமிழ்–12

மதிப்பெண் :90 நேரம்: 3 மணி

---

### பகுதி I

I . அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14 X 1 = 14

1. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ. தனிக்குடும்ப முறை ஆ. விரிந்த குடும்ப முறை
இ. தாய்வழிச் சமூகமுறை ஈ. தந்தைவழிச் சமூகமுறை

2. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் –

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ – அனைத்தும்

3. **கருத்து 1:** இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.
**கருத்து 2 :** தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

4. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்

www.Padasalai.Net

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந்து உறும்

5. பொருத்தி விடை தேர்க.

| | | |
|---|---|---|
| அ) அவன் அவள் அவர் | – | 1) உளப்படுத்தாத் தன்மமைப் பன்மை |
| ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் | – | 2) உளப்பபாட்டுத் தன்மமைப் பன்மை |
| இ) நாம் முயற்சி செய்வோம் | – | 3) தன்மைப் பன்மமைப் பெயர்கள் |
| ஈ) நாங்கள், நாம் | – | 4) பதிலிடு பெயர்கள் |

அ) 4, 1, 2, 3   ஆ) 2, 3, 4, 1   இ) 3, 4, 1, 2   ஈ) 4, 3, 1, 2

6. 'உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு   ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண்பண்பு   ஈ) இவை அனைத்தும்

7. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம்   ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை   ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

8. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| அ) | மாச்சீர் | – | 1) கருவிளம், கூவிளம் |
| ஆ) | காய்ச்சீர் | – | 2) நாள், மலர் |
| இ) | விளச்சீர் | – | 3) தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) | ஓரசைச்சீர் | – | 4) தேமா, புளிமா |

அ) 1,2,4,3   ஆ) 4,3,1,2   இ) 2,3,1,4   ஈ) 3,4,2,1

9. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

www.Padasalai.Net

10. காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் _________ பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம்
இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

11. "மழு" என்பதன் பொருள்

அ) விதைத்து ஆ) கட்டிக்கொள்ளுதல்
இ) கோடரி ஈ) கலப்பை

12. பெருங்கடல் – இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ)உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ)உம்மைத்தொகை

13. ஒவ்வொரு – என்பது

அ)தன்மை ஆ) ஒருமை இ) பன்மை ஈ) ஒன்றன்பால்

14. 'சாய்வு நாற்காலி' சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு

அ) 1996 ஆ) 1967 இ) 1987 ஈ) 1997

## பிரிவு – 2

**II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – யார்க்கு?
16. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்ததைக் குறிப்பிடுக.
17. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
18. நகரம் பட்டடை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

## பிரிவு – 3

**III. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. நடை அழகியல் பற்றித் தொல்ககாப்பியம் கூறும் கருத்ததைக் குறிப்பிடுக.

www.Padasalai.Net

## பிரிவு – 4

**IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
23. புணர்ச்சி விதி எழுதுக. (ஒன்று மட்டும்)
அ) அருங்கானம் ஆ) செல்லிடத்து
24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்
25. தமிழாக்கம் தருக
A new Language is a new life
26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்
27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தலை, தளை, தழை
28. கலைச்சொல்லாக்கம் தருக
அ) Railway Signal ஆ) Mini meals
29. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக
அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
30. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

அ) கண்ணிரண்டும் __________ ( இலாதார் / இல்லார் )
ஆ) வெண்ணிலவு ____________ (காய்கிறது / ஒளிர்கிறது

## பகுதி 5

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 4 = 8

31. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.
32. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வவாறு பதிவு செய்கிறார்?
33. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. "மூன்றான காலம் போல் ஒன்று" –எவை? ஏன்? விளக்குக

## பகுதி 6

VI. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 7 = 14

35. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக
38. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் –விளக்குக.

## பகுதி 7

VII. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 X 4 = 12

39. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

(அல்லது)

வாகைத்திணை (அல்லது) பரிசில் துறை – சான்றுடன் விளக்குக ?

40. **இலக்கிய நயம் பாராட்டுக.**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனும் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

– நாமக்கல் கவிஞர்

41. வெண்பாவின் பொது இலக்கணம் யாது?
42. எறும்பு ஊரக் கல்லும் தேயும் – பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுது
43. தமிழாக்கம் தருக.

In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-

www.Padasalai.Net

let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

## பகுதி–IV

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 6 = 18

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக

45. அ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்க காட்டி விளக்குக

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்...... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

(அல்லது)

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்ததை விவரிக்க.

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) துன்பு உள – எனத் தொடங்கும் கம்பராமாயண பாடலை எழுதுக

ஆ) மிகும் – என முடியும் குறளை எழுதுக

வே.போதுராசா – தேனி
முதுகலைத் தமிழாசிரியர்

www.Padasalai.Net